மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.

முன்னிலை : திருமதி.P.கோபால அரசி, பி.எஸ்சி., பி.எல்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை.

**I.A. No.531/2024 in O.S.No.118/2023**

1. பார்த்தசாரதி,
2. கேசவன் ...மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

/எதிர்/

சரவணன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 02.01.2025 அன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.பவுன்ராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கோபாலகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ள சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் ஆய்வின் கீழ் இருந்தும் வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>உத்தரவு</u>

மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரி, உ.வி.மு.ச.கட்டளை 7, விதி 11 (a) மற்றும் (d)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **<u>மனுவின் சுருக்கம்</u>**

(1.1) இம்மனுவின் மனுதாரர்கள், அசல் வழக்கின் 1,2 பிரதிவாதிகள் ஆவார்கள். மனுதாரர்களின் தகப்பனார் கிருஷ்ணசாமி உபாத்தியார் மற்றும் அவரது சகோதரர் தியாகராஜன் ஆகிய இருவருக்கும் பிராது தபசில் சொத்தானது பாத்தியப்பட்டு, அவர்கள் இருவரும் காலஞ்சென்ற பிறகு, 1,2 வது பிரதிவாதிகளான மனுதாரர்களுக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்தாகும்.

P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI Date: 2025.01.10 16:53:48 +0530

(1.2) இம்மனுதாரர்களோ, அவர்களது தகப்பனாரோ எந்த காலத்திலும், எவருக்கும் குத்தகைக்கோ, பாட்டத்திற்கோ கொடுத்ததும் இல்லை. அதற்கான தொகை எதுவும் பெறவும் இல்லை என்பது மட்டுமே உண்மையாகும். மேற்படி உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் மூத்த குடிமகன்களாகிய மனுதாரர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் நோக்கத்தோடு அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

(1.3) மேற்படி பிராது தபசில் சொத்தானது 1ம் பிரதிவாதியின் பெயரிலேயே நாளது தேதிவரையில் எந்த ஒரு வில்லங்கத்திற்கும், உட்படாமல் இருந்து வந்தமையால் மனுதாரர்கள் பிராது தபசில் சொத்தினை 3ம் உத்தேச பிரதிவாதியான குமரேசன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள். மேலும் வாதிக்கு பிராது தபசில் சொத்தில் எந்த ஒரு உரிமையும் கிடையாது. வாதி பிராது தபசில் எந்த உரிமையும் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை. பிராது தபசில் சொத்தில் தனக்கு உரிமை உள்ளது என்பதற்கான வருவாய்துறை சான்றுகளையோ சமர்ப்பிக்கவில்லை.

(1.4) மேலும் மனுதாரர்களிடமோ, அவர்களது தகப்பனாரிடமோ, அவரது சகோதரரிடமோ குத்தகை பெற்றதற்கான எந்த ஒரு ஆவணங்களும் நீதிமன்றத்தாரின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் இம்மனுதாரர்களின் வயது முதிர்வையும், மென்மையான பயந்த சுபாவங்களை தனக்கு சாதகமாக பயன்படுத்தி, மனுதாரர்களை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, வாதியால் பொய்யான சங்கதிகள் உற்பத்தி செய்யப்பட்டு, மேற்படி வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, வழக்குரையை நிராகரிக்கக்கோரி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

(2.1) மனுதாரர்களின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர்களின் மனு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யக்கூடியதாகும். உண்மையில் வழக்கு தாக்கல் செய்த பிறகுதான், 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தினை வழக்கிடை காலத்தில், 3ம் பிரதிவாதிக்கு இவ்வழக்கின் நோக்கத்தினை கெடுக்கும் கெட்ட எண்ணத்தில், பெயரளவு கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளனர் என்ற விபரம் எதிர்மனுதாரருக்கு தெரிய வந்தது.

P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI Date: 2025.01.10 16:53:55 +0530

(2.2) மேற்படி கிரைய ஆவணம் வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏற்பட்டதால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் 1,2 பிரதிவாதியிடமிருந்துதான் வழக்கு சொத்தினை எதிர்மனுதாரர்/வாதி குத்தகைக்கு பெற்று சட்டப்படியாக குத்தகைதாரர் நிலையில் விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார். வழக்கு நிலுவையில் இருந்த போது கிரைய ஆவணம் ஏற்பட்டதால், அந்த ஆவணத்தின் அடிப்படையில் சொத்தின் உரிமையிலோ, அனுபவத்திலோ எந்தவித மாற்றமும் ஏற்படாது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்ட விதியாகும்.

(2.3) மேலும் இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனையானது வழக்கின் முழு விசாரணைக்கு பின்புதான் முடிவு செய்யமுடியும். மனுதாரர் இவ்வழக்கின் நடவடிக்கையை தாமதப்படுத்துவதற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். கட்டளை 7 விதி 11 சிபிசி மனுவானது சட்டத்தால் தடை செய்யப்பட்ட பரிகாரம் கேட்கும் பட்சத்திலோ, நீதிமன்ற ஆள்வரை சம்பந்தமுள்ள பிரச்சனையில் தவறு இருந்தாலோ மட்டும்தான், அதற்கு எதிராக பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்ய இயலும். ஆனால் இவ்வழக்கில் அவ்வாறான பிரச்சனை ஏதும் எழுப்பப்படவில்லை. எனவே, இம்மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக் கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

4) <u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை</u>

இம்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரித்து உத்தரவிடக்கோரும் இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5) <u>தீர்வு</u>

(5.1) வழக்கு சொத்து ஆதியில் மனுதாரர்களின் தகப்பனார் மற்றும் அவரது சகோதரருக்கு கூட்டாக பாத்தியப்பட்டு, அதனை மேற்படியார்கள் 2000 ல் கொடுத்த வாய்மொழி குத்தகை மூலம், மனுதாரரின் தகப்பனார் அதில் பயிரிட்டு விவசாயம் செய்து வந்ததாகவும், மேற்படியார்களின் வாரிசுகளுக்குள் ஏற்பட்ட



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.01.10 16:54:03 +0530

பாகப்பிரிவினையின்படி, வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட பிறகு, வாதியின் தகப்பனார் மனுதாரர்களிடம் வாய்மொழி குத்தகைக்கு பெற்றதாகவும், பின்னர் வாதியின் தகப்பனார் காலத்திற்கு பிறகு அதனை வாதி 2025 வரை வாய்மொழி குத்தகைக்கு பெற்று அனுபவித்து வருவதாகவும், இந்நிலையில் மனுதாரர்கள் வழக்கு சொத்தினை ஒரே நபருக்கு குத்தகைக்கு கொடுக்க போவதால் வழக்கு சொத்தை காலி செய்து தரக்கோரி இடையூறு செய்வதாகவும், எனவே, மனுதாரர்/வாதி குத்தகைதாரர் நிலையில் பயிர் செய்து அனுபவம் செய்து வருவதை சட்டப்படியான வழியில் அல்லாமல், வேறு வழியில் காலி செய்ய கூடாது என இம்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 10.11.2023 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.2) அசல் வழக்கில், 10.01.2024 ல் எதிர்வழக்குரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளநிலையில், மனுதாரர்கள் காவல் துறை அதிகாரிகளுடன் சேர்ந்து கொண்டு, பிராது தபசில் சொத்தில் மனுதாரரின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததாகவும், மேற்படி எதிர்மனுதாரர்களின் செயல்களுக்கு ஆதரவாக சாத்தான்குளம் காவல் உதவி ஆய்வாளர், சாத்தான்குளம் சார்பதிவாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் உள்ளதாகவும், சாத்தான்குளம் காவல் உதவி ஆய்வாளர், சாத்தான்குளம் சார்பதிவாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்க கோரி, வாதியால் I.A.No.10/2024 என்ற மனுதாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவானது 12.04.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

(5.3) இந்நிலையில், அசல் வழக்கில் 1,2 பிரதிவாதிகள்/மனுதாரர்களால் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, 02.07.2024 ல் எழுவினாக்கள் வனையப்பட்டு, வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில், 14.02.2024 ல் 2 ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தினை கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகவும், மேற்படி 2 ம் எதிர்மனுதாரர், மனுதாரர் வைத்துள்ள பயிர்களை அழித்து விடுவதாக மிரட்டியதாகவும், எனவே, 2 ம் எதிர்மனுதாரரை இவ்வழக்கில் 3 ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க கோரி, இ.ம.எண்.330/2024 என்ற மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது.



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.01.10 16:54:13 +0530

(5.4) மேற்படி மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், அசல் வழக்கில், வழக்குரையை சீர்திருத்தம் செய்ய வேண்டி, இ.ம.எண்.474/2024 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு, வழக்குரை சீர்திருத்தம் செய்யப்பபட்டுள்ளது. பின்னர், அசல் வழக்கு 1,2 பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரைக்காகவும், 3 ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரைக்காகவும் நிலுவையில் உள்ள நிலையில், வழக்குரையை நிராகரிக்க கோரி, இம்மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(5.5) உ.வி.மு.ச. கட்டளை 7, விதி 11ன் படி கீழ்கண்ட சந்தர்ப்பங்களில் வழக்குரை நிராகரிக்கப்பட வேண்டும்.

அ) ஒரு வழக்கு மூலத்தையும் வெளிப்படுத்தாதவிடத்தும்,

ஆ) கோரப்பட்ட பரிகாரம் குறை மதிப்பீடு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அம்மதிப்பீட்டைத் திருத்தும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுதப்பட்டிருந்து வாதி அவ்வாறு செய்ய தவறுகிறவிடத்தும்,

இ) கோரப்பட்ட பரிகாரம் உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டு, ஆனால் வழக்குரையானது குறைவாக வில்லை ஒட்டப்பட்ட தாளின் மீது எழுதப்பட்டிருக்கிற விடத்தும், நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டிய காலத்திற்குள் தேவைப்படும் முத்திரைத்தாளை கொடுக்கும்படி நீதிமன்றத்தால் வேண்டுறுத்தப்பட்டிருந்து வாதி அவ்வாறு செய்ய தவறுகிறவிடத்தும்,

ஈ) உரிமை வழக்கானது சட்டம் எதனாலும் தடை செய்யப்பட்டிருப்பதாக வழக்குரையிலுள்ள உரையிலிருந்து தெரிய வருகிறவிடத்தும்,

உ) இரட்டை படிகளில் வழக்குரை தாக்கல் செய்யப்படாதிருக்கும் போதும்,

ஊ) விதி 9ன் வகையங்களை வாதி கடைபிடிக்க தவறியிருக்கும் போதும், வழக்குரையை நீதிமன்றம் நிராகரிக்கலாம்.

(5.6) வழக்குரையை நிராகரிக்கும் போது, கருத்தில் கொள்ள வேண்டியவை குறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றம் கீழ்கண்ட வழக்கில் பின்வருமாறு தெளிவாக



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.01.10 16:54:23 +0530

கூறியுள்ளது.

**P.V. Guru Raj Reddy Vs P. Neeradha Reddy**

**2015 SCC ONLINE SC 118**

At the stage of exercise of power under Order 7 Rule 11, the stand of the defendants in the written statement or in the application for rejection of the plaint is wholly immaterial. It is only if the averments in the plaint ex facie do not disclose a cause of action or on a reading thereof the suit appears to be barred under any law the plaint can be rejected. In all other situations, the claims will have to be adjudicated in the course of the trial."

(5.7) அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில், வழக்கு சொத்து இம்மனுதாரர்களின் தகப்பனார் வாய்மொழியாக வாதியின் தகப்பனாருக்கு குத்தகைக்கு கொடுத்ததாகவும், பாகபிரிவினைக்கு பிறகு இம்மனுதாரர்களிடமிருந்து எதிர்மனுதாரிரன் தகப்பனார் வாய்மொழி குத்தகைக்கு பெற்று, வழக்கு சொத்தில் உடல் உழைப்பு மூலம் மெய்ப்பாடுபட்டு, விவசாயம் செய்து அனுபவித்து வந்ததாகவும், எதிர்மனுதாரரின் தகப்பனார் காலத்திற்கு பிறகு, எதிர்மனுதாரர் இம்மனுதாரர்களிடமிருந்து வாய்மொழி குத்தகைக்கு பெற்று, விவசாயம் செய்து அனுபவித்து வருவதாகவும் கூறியுள்ளார்.

(5.8) ஆனால் இம்மனுதாரர்கள் தரப்பு எதிர்வழக்குரையிலும், இம்மனு பிரமாண பத்திரத்திலும், வழக்கு சொத்து இம்மனுதாரர்களுக்கு பாகபிரிவினைப்படி பாத்தியப்பட்டதாகவும், வழக்கு சொத்தினை இம்மனுதாரர்களோ, அவர்களது தகப்பனாரோ, எக்காலத்திலும், எவருக்கும் குத்தகைக்கு கொடுத்ததில்லை என்றும் மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், வழக்கு சொத்தினை பிரதிவாதிகளிடம் வாய்மொழி குத்தகைக்கு பெற்று, எதிர்மனுதாரர் விவசாயம் செய்து, அனுபவித்து வருகிறாரா இல்லையா என்பது குறித்தும், வழக்கு சொத்து தற்போது யாருடைய அனுபவத்தில் இருந்து வருகிறது என்பது குறித்தும், வழக்கு விசாரணைக்கு பிறகே தீர்மானிக்க



P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.01.10 16:54:28 +0530

முடியும்.

(5.9) எனவே, உ.வி.மு.ச. கட்டளை 7 விதி 11 ன் கீழ், கூறப்பட்டுள்ள காரணங்களுக்காக மட்டுமே, வழக்குரையை நிராகரிக்க முடியும் மற்ற காரணங்களுக்காக வழக்குரையை நிராகரிக்க முடியாது என்று மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் பல்வேறு தீர்ப்புகளில் சுட்டிக்காட்டியுள்ள நிலையிலும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை கொண்டு வழக்குரையை நிராகரிக்க முடியாது என்றும், சாட்சிய விசாரணைக்கு பிறகே வழக்கினை இறுதியாக தீர்மானிக்க முடியும் என்றும், எனவே இம்மனு அனுமதிக்கத் தக்கதல்ல என்றும், தீர்வு காணப்படுகிறது.

**இறுதியாக, இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது**.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல சொல்ல அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 10ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.01.10 16:54:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

<u>இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை</u>

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.01.10 16:54:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

District Munsif Court, Sathankulam.
IA.No.531/2024
in OS.No.118/2023
Draft/Fair order
Dated : 10.01.2025